www.tamilarangam.net

## எழுச்சி

வானை நோக்கி முஷ்டி உயர்த்தி
வீரகர்ஜனை செய்தது ஆழி.
ஒறி எழுந்த கைகள் விரிந்து
பாறை மேனியில் பாய்ந்து அறைந்தன.
கடிய பாறையின் பரிய போர்வையை
பிராண்டிப்பியித்தன வெண்ணுரை நகங்கள்
கடலைப் பாறை நெரிக்கும் வரைக்கும்
கடலின் கரங்கட் கேது ஓய்ச்சல் !

-சிவசேகரத்தின் 'நதிக்கரை மூங்கில்'
என்ற கவிதைத் தொகுதியிலிருந்து

● 'புரட்சியுத்தம் 'என்பது பொதுமக்களின் யுத்தம், பொதுமக்களை தட்டியெழுப்பி, அவர்களைச் சார்ந்திருந்தால் தான் இந்த யுத்தத்தை நடத்த முடியும். ●

ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தி மூன்று ஜூலைக் கலவரத்தின் போது வெலிக்கடைச் சிறைச் சாலையில் பாசிச அரசினால் படுகொலை செய்யப்பட்ட தங்கத்துரை, டாக்டர் இராசசுந்தரம், குட்டிமணி, ஜெகன், இராஜேந்திரன் உட்பட ஐம்பத்தி நான்கு விடுதலைப் போராளிகளுக்கும், களத்தில் இறந்த விடுதலைப் போராளி செல்லக்கிளி அவர்கட்கும், இனக்கலவரத்தில் மரணித்த எம் சகோதரர்களுக்கும், எமது அஞ்சலியை சிரந்தாழ்ந்தித் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முளைத்து எழுந்து தளிர்த்து வளர்ந்து
செழித்து வளைந்து சரிந்து விழுந்து
இறந்து கிடந்த நெல்லின் தலையில்
இருந்தன நாளைய பரம்பரை நூறு
(நன்றி "நதிக்கரை மூங்கில்—சிவசேகரம் ")

# தமிழீழ தேசிய விடுதலை முன்னணி

# National Liberation Front of Thamileelam

" ........................ ............,
..............................................

கண் விழித்திருப்போம்
நண்பர்களே!

சோகம் படர்ந்த
தேசப் படமும்,
இதுவரை காலம்
சிந்திய இரத்தமும்,
இதுவரைகால
இழப்பும்,
நெருப்பும்,
எரியும் மனமும்

இன்னொருவனுக்கு அடிமையாகவா?

இரவல் படையில்
புரட்சி எதற்கு?
எங்கள் நிலத்தில்
எங்கள் பலத்தில்
எங்கள் கால்களில்
தங்கி நில்லுங்கள்

வெல்வோமாயினும் வாழ்வோம்;
வீழ்வோமாயினும் வாழ்வோம்!
நமது பரம்பரை
போர் புரியட்டும் "

—சேரன்

● ●

வெகுஜனத் தொடர்பு என்பது

வெடி குண்டுகளைக் காட்டிலும் வலிமையானது.

எமது விடுதலைப் பாதை கடினமானதும், கஷ்டங்கள் நிறைந்ததும் தான். இருப்பினும் எமது இலட்சியங்கள் மகத்தானவை. கஷ்டங்களை துச்சமாக மதித்து, தடைகளைத் தகர்த்தெறிந்து, எமது வாழ்வுக்கான விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்போம்.

www.tamilarangam.net

# ஸ்ரீலங்கா பேரினவாத அரசின் ஒடுக்குமுறையும் அதற்கெதிரான போராட்ட நடைமுறைகளும்.

1983ம் ஆண்டு யூலைக்கலவரத்தின் குரூரமும், கொடுமையும் உலகெங்கிலுமுள்ள மனிதாபிமானமுள்ள மக்களை திகைப்பிலாழ்த்தியது மட்டுமல்ல, பௌத்த பேரினவாதத்திலமிழ்ந்துள்ள ஸ்ரீலங்கா அரசின் சுயரூபத்தை வெளியுலகிற்கு இனங்காட்டியது.

ஆனாலும் சர்வதேச அரசியலானது, மனிதாபிமானத்தினடிப்படையிலோ அல்லது ஜனநாயக உரிமைகளை உலகெங்கிலுமுள்ள மக்களிற்கு பரவலாக்கும் நோக்கத்திலேயோ நடைபெறும் ஒன்றல்ல. பல்வேறு சக்திகளின் பொருளாதார நலன்களும், அதனடிப்படையில் அவர்களின் அரசியல், கலாச்சார ஆதிக்கத்திற்கான போட்டியையும் மையமாகக் கொண்டது.

இதனை நாம் புரிந்துகொள்ளும்போதுதான் உண்மையில் உலக ஜனநாயகத்தின் காவலர்கள் என்று கூறிக்கொள்ளும் ரீகன், மார்க்கிரட் தச்சர் மற்றும் ஏனைய நாட்டு தலைவர்களினதும், அவர்களது அரசியலினதும் சுயரூபத்தை புரிந்துகொள்ளமுடியும்.

நிக்கரகுவாவில் கடந்த முப்பது ஆண்டுகளாக பல்வேறு பின்னடைவுகளிற்கும், பாரிய அழிவுகளிற்கும் மத்தியிலும் போராடி உருவாகிய அரசை நிர்மூலமாக்கும்பணியில் மூர்க்கமாக ஈடுபடுபவர்கள் இந்த தலைவர்கள்தான்.

தென்னாபிரிக்காவில் நவீன அடிமைகளாக 80% ஆன மக்களை அவர்கள் மண்ணிலேயே வைத்திருக்கும் இனவெறியரசுடன் கொஞ்சிக்குலாவவும் தயங்காதவர்கள் இவ் ஜனநாயகக்காவலர்கள்.

மேலும் எரித்திரீய மக்களின் போராட்டத்தை தமது சொந்தநலனிற்காக கைவிட்ட வல்லரசுகளின் அரசியலும் எமக்கொருபடிப்பினையாகும்.

மேற்கூறியவற்றைக் கருத்திற்கொள்ளும்போதே, எமது போராட்டத்தில் எமது மக்களின் முழுமையான பங்களிப்பின் அவசியத்தையும் அதனடிப்படையில் போராட்டத்தை முன்னெடுக்கும் சக்திகளின் பல்வேறு கடமைகளையும் உணர்வுபூர்வமாக நடைமுறைப்படுத்தமுடியும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகின் ஒடுக்குமுறையாளர்களும், பிற்போக்குவாதிகளும் மக்களின் மேலோட்டமான உணர்வுகளை [SUPERFICIAL FEELINGS] முன்வைத்தே தமது அரசியலை நடத்துவார்கள். ஏனெனில் அம்மேலோட்டமான உணர்வுகளை தீர்மானிக்கும் இன்றைய பொருளாதார உறவுகளின் பாதுகாவலர்கள் அவர்களே.

மிகவும் பலம் வாய்ந்த சக்திகள்போல் தோன்றும் இவர்களை முறியடிப்பதற்கு நாம் அவர்கள் ஆதிக்கதிலுள்ள மக்களின் சிந்தனையை கூர்மைப்படுத்தி, அதிலிருந்து விடுவித்து, மக்களின் பலத்தில் நம்பிக்கை வைத்து போராட்டத்தை முன்னெடுத்தல் அவசியம்.

குறுகிய உணர்வுகளைச் சுற்றி நாம் அதனடிப்படையில் தற்காலிகமாக போராட்டத்திற்கு அணிதிரட்டுவோமாயின், எம்மால் மக்களின் முழுமையான விடுதலைக்கு போராட்டத்தை முன்கொண்டு செல்லமுடியாதது மட்டுமல்ல அதன் உள்-முரண்பாடுகளின் விளைவுகளால் இடைவழியில் திக்குமுக்காடும் நிலைமைக்குத் தள்ளப்படுவோம். இதற்கு உலகவரலாற்று நிகழ்வுகள் பல எம்முன்னே உண்டு.

இங்கிலையில், வெளிநாட்டில் வதியும் தமிழ்மக்களாகிய எமது கடமையென்ன?

எமது சொந்தமண்ணில் நிகழும் கோரங்களையும், அட்டூழியங்களை கண்டு நாம் உணர்ச்சி வசப்படுவது சகஜமே.

பல சந்தர்ப்பங்களில் மனிதர்கள் உணர்ச்சிமேலீட்டினால், முழுமையை சிந்திக்காது விடுவதும் தவிர்க்கமுடியாததே

ஈழம்வாழ்மக்கள் நேரடியாக முகங்கொடுக்கும் நிலைக்கும், வெளியில் வதியும் எமக்கும் உள்ள வேறுபாடு, ஆரம்பத்தில் உணர்ச்சி வசப்பட்டாலும் பின்னால் நிதானமாகச் சிந்தித்து, பிரச்சனைகள் முழுமையைப் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் எமக்கு உள்ளதென்பதே.

அந்தசந்தர்ப்பத்தை முழுமையாக பயன்படுத்தத்தவறி, "செயற்படுவோம் பின்னர் சிந்திப்போம்" எனும் பாணியில், அறிவுபூர்வமற்ற சிந்தனை விளைவான செயற்பாட்டிற்கு அத்திவாரமிடுவோமாயின், நாம் எமது வரலாற்றுக்கடமையிலிருந்து தவறியபழியை எமது எதிர்கால சந்ததியினர் ஊட்டுற சுமத்தும் பாரிய தவறினை இழைத்தவர்கள் ஆவோம்.

www.tamilarangam.net

ஈழத்தில் எமது போராட்டத்தின் சரியான வளர்ச்சிப்போக்கு, செயற்பாடுகள் அதன் உறுதிப்பாடு என்பனவே உலகிலுள்ள மக்களை எமது நியாயமான போராட்டத்திற்கு உறுதியான ஆதரவை நல்க வைக்கும். எனவே நாம் ஒவ்வொர் கணமும் ஈழத்தில் நடக்கும் போராட்டத்தின் பல்வேறு அம்சங்களையும் பற்றி ஆழமாகப்பார்த்து சரியான சக்திகளை இனங்காணவும் அவற்றை வளர்க்கவும் முயற்சிக்க வேண்டும். அதேவேளை எம்மாலானமட்டும் எமது போரா-ட்டத்தின் நீதியான தன்மையை வெளியுலகிற்கு, பல்வேறு ஸ்தாபனங்களையும் பயன்படுத்தி தெரியப்படுத்தவேண்டும்.

போராட்டம் என்பது நேரான தொடர்ச்சியான ஒருங்கமைவான பாதையில் எப்போதும் செல்வதில்லை. அது பல்வேறு வளைவுசுழிவுகளிற்கும் பின்னடைவுகளிற்கும் உட்பட்டே வளர்ச்சியடையும். நாம் எவ்வளவுதூரம் நீண்டகாலகண்ணோட்டத்துடன் பிரச்சனைகளை அணுகின்-றோமோ அவ்வளவிற்கு எம்மால் எமது போராட்டப்-பாதையில் தோன்றும் தடைகளை இனங்கண்டுகொள்ளவும் அவற்றிற்கெதிராக எம்மை தயார்படுத்திக்கொள்ளவும் உதவும். இதுவே எமது போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கவும், தொடரவும் அத்தியாவசியமானது. அதைவிடுத்து, குறுகியகாலகண்ணோட்டத்தின் அடிப்படையில் எமது போராட்டத்தை பார்க்கும்போது, பரவலான, மக்கள-மைப்பை கட்டுவதில் அக்கறையின்மையும் அதனாலேற்-படும் சிறிய கஷ்டங்களிற்கும் சலிப்படையும் மனப்பான்மையை-யும் அந்நிய உதவியில் அதீத நம்பிக்கையும் எமது போராட்டத்தை விரைவில் சரணாகதியடைய வைக்கும் வாய்ப்புக்களை உருவாக்கும்.

போராட்டம் தொடர்கின்ற இக்காலக்கட்டத்தில் தலைமை வழிபாடுகளை தவிர்க்கவும், தமிழ்மக்களின் எதிர்-காலத்தை ஓரிரு தலைவர்கள் தீர்மானிப்பது அல்லது தீர்மானிக்-கின்றோம் என்ற பிரமையை வளரவிடாது தடுக்கவும். எம்மாலான சகல முயற்சிகளையும் நாம் செய்யவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கங்களிற்கிடையேயான ஐக்கியம், சரியான பொது-வேலைத்திட்டத்தின் அடிப்படையில் வளர்ச்சியுறவும், அவை பெருமையான மக்களின் நலனின் அடிப்படையில் உருவாகவும் தமிழீழ தேசிய விடுதலை முன்னணி போராடும்.

அராஜகவாததன்மைகளிற்கு இடமளிக்காத போராட்டத்தை முன்னெடுக்க மக்களின் அரசியல் விழிப்பும், பங்குபற்றுதலும் இன்றியமையாதது.
நமது இழப்புகளும் அழிவுகளும் வீணாகிவிடாது தடுக்கவும் எமது போராட்டத்தை அதன் இறுதி வெற்றியை நோக்கி வளர்க்கவும் சகல ஜனநாயக சக்திகளையும் அணிதிரட்டுவோம்!

ஐக்கியத்திற்காகப் போராடுவோம்
போராட்டத்திற்காக ஐக்கியப்படுவோம்!

உலக அரங்கில் நேசசக்திகளை இனங்கண்டு, அவர்களது உறுதியான ஆதரவிற்காக சகலவழிகளிலும் போராடுவோம்!

தமிழீழ தேசிய விடுதலை முன்னணி
- லண்டன் கிளை -

NLFT
BM BOX 7204
LONDON
WC1N 3XX

www.tamilarangam.net

# நாங்கள் எதை இழந்தோம்?

நாங்கள் எதை இழந்தோம் ?
நம் இனிய நண்பனே....

நடுத்தெருவில் சுட்டெரித்து
நாய்கள் நிணம் புசிக்கச்
செம்மணியில் வீசுதற்கா
திருமலையில் தொட்டிலிட்டு
உன்னை ஈழமகள்
பெற்றெடுத்தாள் ?

காலனது காலடிகள்
காற்றதிரப் பதிவதற்கா
காலமகள் நீரெடுத்துக்
கோலமிட்டாள் மணற்பரப்பில் ?

நெற்கதிரே,
நீள்விசும்பே,
நெஞ்சு இரங்காச் சூரியனே,
புல்லின் இதழ் நுனியில்
பூத்திருக்கும் பனித்துளியே

நீங்கள் அறிவீர்களா
எம் நெஞ்சுறையும் சோகத்தை ?

எம் செந்நீரின் சரித்திரங்கள்
திசை எங்கும் சேதி சொல்ல
காற்றில் கலந்துவிட்ட
சாம்பல் துகள்களிலே
பயணம் தொடர்ந்த கதை
யார்தான் அறியவில்லை....?

எங்கள் இளந் தோழா !
அப்பாவி மக்களின்மேல்
மட்டுமே மறுபடியும்
துப்பாக்கி சுடத் தெரிந்த
'வீரமிலா நாய்'களது
வெறித்தனத்தில் உயிரிழந்தாய்....

நீள் தொலைவில்,
பைன் மரத்துக் காடுகளில்
பனி உறையும் குளிர் இரவில்
முன்னவர் உனை நேசித்த
பெண்ணவளின் கண்கலங்கும்....

வாழ்க்கை அன்று தீர்த்து வைக்க
முடியாத ஒரு வழக்கை
மரணம் இன்று
முடித்து வைத்த
துயர்க்கதைக்குச் சாட்சியில்லை,
துயரங்களும் முடிவதில்லை....

உனை அவளும் இழந்தாள்.

நாங்கள் எதை இழந்தோம் ?

உன் உயிரை, உனைப்போல
இன்னும் பல உயிரை.

ஆனால்,
நம்பிக்கைகளை
நாங்கள் இழக்கிலோம்.
நமது கடமையை
நாங்கள் இழக்கிலோம்.
நமது நாட்டையும்
ஒருபோதும் நாம் இழக்கோம் !

அது போதும் உனக்கு.

காற்றாகி நில் ;
கடலாகி அலை வீசு !
போரிடும் நம் தோழர்களின்
வேட்டொலிக்குப் புறங்காட்டித்
தோற்றோடும் ராணுவத்தின்
அவலக் குரல்களின்மேல்
உனதும், உனைப் போன்ற
ஏராளம் மக்களதும்
நினைவுச் சாசனத்தை
இந் நிலத்தில் நாம் பொறிப்போம் !

(நண்பன் கேதீஸ்வரன் நினைவுக்கு)
'நின்றி — சேரன்'